**மாற்றுகள்:**

1. செயற்பாடு நன்றாக அறிமுகம் செய்யப்பட்டிருப்பின், முழு வகுப்பினையும் இப்பயிற்சியில் ஈடுபடுத்துவற்கு ஈடாக, ஒன்று அல்லது இரண்டு குழுக்கள் மட்டத்தில் இதனை நடத்தலாம்.

2. "பொது நூல்" வேறுபாடு: ஒருவனோ/ஒருத்தியோ கையில் ஒரு நூற்பந்தினை அல்லது ஒரு நூலை வைத்துக்கொண்டு கதை சொல்லத் தொடங்குகிறான்/தொடங்குகிறாள். கதையைத் தொடர்வதற்காக அவள்/அவன் பந்தினை மற்றவருக்கு (அல்லது தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு) கடத்தும்போது நூலின் தொடக்கத்தைத் தன் கையிலே வைத்திருப்பாள்/வைத்திருப்பான். இவ்வாறு இது தொடர, ஒவ்வொரு பங்கேற்பவரும் நூல்புரியினை அடுத்த மாணவருக்குக் கடத்தும்போது நூலினைக் கையிலே பிடித்திருப்பர். இதனால் கதையின் வளர்ச்சிக்கு இணையொத்ததாக ஒரு நூல் வலை (ஒன்றினூடாக வளர்த்துச் செல்லும் குறியீடு symbolisches Leitmotiv) வகுப்பு முழுவதும் பரப்பப்படுகிறது. அதே நேரத்தில், எந்த மாணவர்கள் தொடரில் இன்னும் பங்கேற்கவில்லை என்பதையும் அது காட்டுகிறது.)

# 2 இணைந்து எழுதுதல்: கவிதை, தொடர், சங்கிலி அல்லது மடிக்கதைகள்

**இலக்கு**

மாணவர்களின் ஆக்கத்திறனையும் மற்றும் விளையாட்டாக எளிதாக அணுகக்கூடிய "தொடக்கநிலை" முறையில் தங்கள் முதல் மொழியில் எழுதுவதில் மற்றும் கதை சொல்வதில் மகிழ்வடைவதையும் ஊக்குவிப்பதற்கு.

## இணைந்து எழுதுதல்: கவிதை, தொடர், சங்கிலி அல்லது மடிக்கதைகள்

1 - 9 ஆந் தரம் | 15 - 20 மணித்துளிகள்

கருவிகள்:
ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் ஒவ்வொரு தாள் வெறுமையாக அல்லது முதல் வாக்கியம் அல்லது பந்தியுடன் (ஆசிரியரின் கற்பனை அல்லது எழுத்துருக்களிலிருந்து மாணவர்கள் சேர்த்த முதலாவது வாக்கியங்களின் திரட்டிலிருந்து).
தாள் வெறுமையாயிருப்பின், மாணவர்கள் தம்முடைய முதல் வாக்கியங்களை அமைத்துக் கொள்ளவேண்டும்.

**செயல்முறை**

அடிப்படை முறை பின்வருமாறு:

அ) மாணவர்கள் ஒரு கதையின் தொடக்கத்தின் ஒரு பகுதியாக ஒரு வாக்கியம் அல்லது ஒரு சிறிய பந்தியினைப் பெறுவர் அல்லது அப்படியொரு தொடக்கத்தினைத் தாங்களாகவே பக்கத்தின் மேல் பகுதியில் எழுதுவர்.

ஆ) பின்னர் அத்தாள் துண்டினை தங்கள் வலது பக்கத்திலுள்ளவர்களுக்குக் கடத்துகிறார்கள், அவர்கள் அதில் எழுதியவற்றைப் படித்துவிட்டு அக்கதையினைத் தொடர 1அல்லது 2 வாக்கியங்களைச் சேர்த்து வலது பக்கத்தில் அடுத்துள்ளவரிடம் கடத்தப்படுகிறது.

இ) எல்லாத் தாள்களும் வகுப்பு அல்லது குழு ஊடாக ஒரு தடவை சுற்றிச் செலுத்தியவுடன் பயிற்சி முடிவடைகிறது.

ஈ) நிறைவாக, கதைகள் உரக்கப் படிக்கப்படும் அல்லது சுவரில் தொங்கவிடப்படும் அல்லது உரக்கப் படித்த பின்னர் சுவரில் தொங்கவிடப்படும்.

**கருத்துகள்:**

- ஒவ்வொரு மாணவனுக்கும்/மாணவிக்கும் ஒரு தாளாக ஒரு தொடர்வரிசையின் முடிவின் முன்னர், (பெரும்பாலும் வகுப்பு முழுவதிலும் தாள்கள் பகிர்ந்தவுடன்) இறுதியான இரண்டு அல்லது மூன்று வாக்கியங்கள் கதையினை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என மாணவர்களுக்கு அறிவுரை வழங்கல் பயனுள்ளது, ஏனெனில் அது வெறுமனே திடீரென முடிவுறாதிருப்பதற்காக.

- சிறுவர்களுடன், முதலில் கதைகளை வாயூடாக உருவாக்குவது துணைசெய்வதாயிருக்கும் (மேலே #1 தொடக்கப் பயிற்சியை பார்க்க).

I

- திருத்தங்கள் மிக அவதானமாகச் செய்யவேண்டும், அதனால் மாணவர்களுடைய ஆக்கத்திறன் நலிவடையாமலிருப்பதற்காக. எனினும், ஆசிரியர் எழுத்துருக்களை உறுதியாக மீளாய்வு செய்யவேண்டும். ஏனெனில் மாணவர்கள் இன்னும் பிழைவிடக்கூடிய, துணைவேண்டக்கூடிய பரப்புகளை அவை சான்றுகாட்டுவனவாக அமையலாம்.

---


**மாற்றுகள்:**

1. செயற்பாடு நன்றாக அறிமுகம் செய்யப்பட்டிருப்பின், முழு வகுப்பினையும் இப்பயிற்சியில் ஈடுபடுத்துவதற்கு ஈடாக, ஒன்று அல்லது இரண்டு குழுக்கள் மட்டத்தில் இதனை நடத்தலாம்.

2. இன்னொரு விருப்பத்தேர்வு 3 – 4 சிறுவர் குழுக்கள் ஒவ்வொரு குழுவும் ஒரு சங்கிலிக்கதை எழுதுதல். இந்நிகழ்ச்சியில், தாள்கள் ஒரு தடவைக்கு மேலாகக் குழுக்களூடாகக் கடத்தப்படும்.

3. ஒரு தாளை மட்டுமே கடத்தக்கூடிய வாய்ப்பும் உண்டு. இந்த வழியில், இயல்பான பாடத்துக்குப் பக்கநிலையாக ஒரு கதை உருவாக்கப்படும், பின்னர் அது பாடம் முடிந்தவுடன் உரத்துப் படிக்கப்படும்.

4. மடிக்கதை: அடுத்தவருக்குக் கடத்துவதற்கு முன்னர், தாளில் எழுதியவற்றைப் படிக்க முடியாதபடி முன்னர் உள்ளவற்றையன்றி கடைசி வாக்கியத்தை மட்டும் படிக்கக்கூடிய வகையில் அது மடிக்கப்படவேண்டும். இதன் விளைவாக எழுத்துரு முழுக் கதையையும் கிளர்ச்சியுடனும் வியப்புடனும் நிறைவாகவும் படிக்கக்கூடியதாக அமையும்.




5. சொல்லுக்குச் சொல்: இந்த வேறுபாடு இளம் மாணவர்களுடனான சிறு குழுக்களுக்காகும். ஒவ்வாரு வாக்கியம் வாக்கியமாகச் (1 – 2 வாக்கியங்கள்) செயற்படுவதற்கு ஈடாக ஒவ்வொரு சொல் சொல்லாகத் தொடர முடியும்: நீண்ட வெட்டுத் தாள்களுடன் தொடங்கவும் (A3 அளவு, கிடைநிலையாக 4 – 5 துண்டுகளாக வெட்டவும்) ஒவ்வொரு தாளிலும் வாக்கியங்களின் தொடக்கமாக அமையக்கூடிய ஒரு சொல்லை எழுதவும். பின்னர் ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒரு சொல்லினைச் (அல்லது ஆகக் கூடியதாக 3 சொற்கள்) சேர்த்து துண்டினை அடுத்தவருக்காக கடத்துவார், அவரும் அதையே செய்வார். நிறைவில், வாக்கியங்கள் உள்ள பல தாள் துண்டுகள் உள்ளன.